KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Impact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.47

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

நீதிநெறி விளக்கத்தில் கல்விச் சிந்தனைகள்

Educational thoughts in Neethineri Vilakkam

முனைவர் சே.பிருந்தா[1,*]

[1] உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) , மேலைச்சிவபுரி.

***Corresponding author:** முனைவர் சே.பிருந்தா, brindhainiyan@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 21 October 2026
Revised: 25 October 2026
Accepted: 28 October 2026

Article ID
KIJTS-2026-0029

Peer review
Double-blind peer review

Keywords
Justice
education
moral
learned people
uneducated people
justice
conduct.

ABSTRACT

In ancient times, Tamil society flourished with virtues like love, courage, and generosity, thriving in the joy of nature. With changes over time and arising needs, ethical texts emerged. Poets took on the responsibility of conveying messages about how people should live in society upholding moral values. As a result, ethical texts came into existence. These texts guided people to live with good conduct, emphasizing the morals and virtues they should follow. In this context, the explanation of ethics presents concepts essential for human life. Based on the ideas in the Thirukkural, this paper discusses the importance of education, the value of wealth, the greatness of scholars, the pride in effort, the principles of monks' life, and the governance of kings. This study focuses on explaining the educational ideas found in the ethical explanations.

How to cite this article: முனைவர் சே.பிருந்தா (2026). நீதிநெறி விளக்கத்தில் கல்விச் சிந்தனைகள். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 569–579.
https://doi.org/10.63300/kijts603112026.47
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் சே.பிருந்தா

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது) , மேலைச்சிவபுரி .

ஆய்வுச் சுருக்கம்

பண்டைக் காலத்தில் தமிழ்ச் சமூகம் காதல் வீரம் கொடை என்னும் பண்புகளால் சிறந்து விளங்கி இயற்கை இன்பத்தில் திளைத்திருந்தது . கால மாற்றத்தின் காரணமாகவும் தேவையின் காரணமாகவும் நீதி நூல்கள் தோன்றின . மக்கள் சமுதாயத்தில் எப்படி

வாழ வேண்டும் எத்தகைய அறநெறிகளைப் போற்ற வேண்டும் என்னும் செய்திகளை உணர்த்தும் பொறுப்பு புலவர்களுக்கு ஏற்பட்டது . அதன் விளைவாகத் தோன்றியதே நீதி நூல்கள். இவை மக்களுக்கு ஒழுக்கங்களையும் பின்பற்ற வேண்டிய அறநெறிகளையும் வலியுறுத்தி நல்லொழுக்கத்துடன் வாழ வழிகாட்டின. அவ் வகையில் நீதிநெறி விளக்கம் மனித வாழ்விற்குத் தேவையான அறநெறிகளைக் கூறியுள்ளது . திருக்குறள் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்ட இந்நூல் கல்வியின் சிறப்பையும் செல்வத்தின் சிறப்பையும் சான்றோர் புகழையும் முயற்சியின் பெருமையையும் துறவியர் பின்பற்ற வேண்டிய நெறிகளையும் மன்னர்களின் ஆட்சிமுறை குறித்தும் கூறுகிறது. நீதிநெறி விளக்கத்தில் பயின்று வந்துள்ள கல்விச் சிந்தனைகளை விளக்குவது இவ்வாய்வின் நோக்கமாகும் .

திறவுச் சொற்கள்

நீதி, கல்வி, அறநெறி, கற்றவர்கள், கல்லாதவர்கள், நீதி, ஒழுக்கம்.

முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் காணலாகும் அறச் சிந்தனைகள் மக்கள் சமுதாயத்தைச் சரியான வழியில் ஒழுக்கத்துடன் கொண்டு செல்கிறது . மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்கமுறைகளின் தொகுதியே அறமாகும் . அத்தகைய அறம் மனிதர்களின் தூய்மையான எண்ணங்களால் வெளிப்படும் என்று சான்றோர் கூறுகின்றனர். சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் அறவழியில் எடுத்துக் கூறியது. சங்கம் மருவிய காலத்தில் மக்களுக்கு அறநெறிகளைப் போதிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது . அதன் விளைவாக நீதி நூல்கள் தோன்றின. மக்கள் தம் வாழ்க்கையில் மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் தூய்மை உடையவர்களாக வாழ வேண்டும் எனும் குறிக்கோளை எடுத்தியம்பும் ஆவணங்களாக நீதி இலக்கியங்கள் திகழ்கின்றன. தமிழ்ச் சமுதாயம் பண்பட்டதாகவும் நாகரீகத்தில் சிறந்ததாகவும் திகழ்வதற்கு நீதி இலக்கியங்களே காரணம் எனலாம். சங்கம் மருவிய கால நீதி இலக்கியங்களின் தொடர்ச்சியாகப் பிற்காலத்தில் எழுந்த நீதி நூல்களில் ஒன்று நீதி நெறி விளக்கம். இந்நூல் 17- ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குமரகுருபரரால் திருமலை நாயக்க மன்னரின் விருப்பத்திற்கு இணங்க இயற்றப்பட்டதாகும். இந்நூலில் எக் காலமும் பயன் கொள்ள வேண்டிய அறநெறிக் கருத்துக்கள் நிறைந்துள்ளன. இந்நூல் கூறும் நெறிகளில் கல்விச் சிந்தனை குறிப்பிடத்தக்கதாகும்.

கல்வி

உலகில் வாழும் மக்கள் பண்பட்டவர்களாக வாழ அடிப்படையாக அமைவது கல்வி. மக்கள் மனத்தைத் திருத்திப் பண்படுத்துவதற்குக் கல்வி இன்றியமையாதது. மனிதனுக்குப் பெருமை மிக்க சிறந்த செல்வம் கல்வியாகும். வள்ளுவர், கல்வியின் சிறப்பை " கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு/ மாடல்ல மற்றை யவை ". (குறள்.400) என்று குறிப்பிடுகிறார் . ஒரு பிறவியில் கற்கும் கல்வி ஏழு பிறவிகளுக்கும்

பயன் தரும். கல்விச்செல்வம் மனித மனத்தைப் பண்படுத்துகிறது. தன்னை உயர்த்துவதுடன் தான் சார்ந்த சமூகத்தையும் நாட்டையும் உயர்த்துகிறது. இத்தகைய கல்வியை எத்தகு நிலையிலும் கற்க வேண்டும் என்பதை " உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் / பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே ".(புறம்:18:1-2) என்று புறநானூறு கூறுகிறது. பிச்சை எடுத்தாவது கற்க வேண்டும் என்பதை, " கற்கை நன்றே கற்கை நன்றே / பிச்சை புகினும் கற்கை நன்றே" (வெற்றிவேற்கை.35) என்று குறிப்பிடுகிறது. "கல்வி என்னும் சொல் கல்லுதல் அல்லது தோண்டுதல் எனும் சொல் அடிப்படையில் பிறந்தது. மனிதனிடத்தில் இயல்பாக உள்ள அறியாமையைத் தோண்டி எறிந்துவிட்டு அறிவூற்றைக் கண்டு அந்த உயர்ந்த சக்தியை வளர்ப்பதே கல்வியாகும் "(எங்கே போகிறோம், குன்றக்குடி அடிகளார்,ப.20) என்று குன்றக்குடி அடிகளார் கூறுகிறார். அத்தகைய கல்வியின் சிறப்புகளை நீதிநெறி விளக்கம் விளக்குகிறது.

கற்றவரின் சிறப்பு

கற்றவருக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு என்று கூறுவர். பல நூல்களைக் கற்று உணர்ந்தவன் அடக்கமுடையவனாய் இருப்பான். ஒருவன் கற்ற கல்வியே நிறைகுணத்தை உடைய மனைவியாகவும் கல்வியின் மூலம் இயற்றப்படும் கருத்துக்கள் அமைந்த கவிதை சிறந்த புதல்வனாகவும் கல்வியால் அடையும் வார்த்தை வளம் சிறந்த செல்வமாகவும் கொண்டு சிறந்த அவையை அலங்கரிக்கின்ற சிறப்பினை அடைவர் என்று குமரகுருபரர் குறிப்பிடுகிறார்.

கல்வியே கற்புடைப் பெண்டிர்அப் பெண்டிர்க்குச்

செல்வப் புதல்வனே ஈர்ங்கவியாச் - சொல்வளம்

.....

செல்வமும் உண்டு சிலர்க்கு (நீ. நெ. வி. 4)

செல்வம் குறைந்தவர்களைக் கண்டு தமது செல்வம் பெரிது என்று மகிழும் மனிதருக்குக் கற்றவர்களின் சிறப்பைக் கூறும் விதமாக அதிகம் கற்று இருப்பவர்களைப் பார்த்து நாம் கற்றவை எல்லாம் இவருக்கு முன் எவ்வளவு தாழ்ந்தது என்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கூறுகிறார். கல்வியறிவு உடையோருக்கு அவர்கள் கற்ற கல்வியே சிறந்த ஆபரணமாகும். மணிகளால் ஆன நகைக்கு வேறு அணிகலன்கள் தேவைப்படாததுபோலக் கற்றவருக்கு வேறு ஆபரணங்கள் தேவையில்லை என்பதை, "கற்றோர்க்குக் கல்வி நலனே கலன்அல்லால்/ மற்றோர் அணிகலம் வேண்டாவாம்" (நீ. நெ. வி.13:1-2) என்னும் அடிகளில் குறிப்பிடுகிறார் . தமிழ் கற்ற அறிஞர்களுக்குப் பிரம்மதேவனும் இணையாகமாட்டான். அறிஞர்கள் படைக்கும் நூல்கள் காலம் கடந்து நின்று அழியாத புகழுடையன ஆதலால் பிரம்மதேவன் அறிஞர்களுக்கு இணையாக மாட்டான் என்று கூறுகிறார். கல்வியும் செல்வமும் பெறாதவர்கள் அவற்றைப் பெறும் பொருட்டுக் கல்வியாளரிடமும் செல்வரிடமும் பணிந்து நிற்பர் . அதுபோலக் கல்வியாளரும் செல்வரும் எவ்வளவு கல்வியறிவும்

செல்வமும் பெற்றிருந்தாலும் பணிவுடையவராய் இருத்தல் வேண்டும் என்று கற்றறிந்தவரின் சிறப்புகளைக் கூறியுள்ளார் . மேலும் கேட்கின்ற மனப்பக்குவம் இல்லாத அற்பர்களுக்கு அவர்கள் விருப்பம் இன்றி நூற் பொருளை எடுத்துரைப்பதால் ஏற்படும் துன்பத்திற்கு வருந்துவது கற்றவர்களுக்கு அழகல்ல . ஆதலால் அறிஞர்கள் ஒருவரின் இயல்பினை அறிந்து கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கல்வியாளர்களின் சிறப்புகளை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

கல்லாதவரின் இழிவு

எதற்கும் பயன்படாத களர்நிலம் போன்று இருக்கும் கல்லாதவர்களை வள்ளுவர், "விலங்கோடு மக்கள் அனையர் இலங்குநூல்/ கற்றோரோ டேனை யவர்". (குறள். 410) என்று விலங்குகளுக்கு ஒப்பாகக் கூறுவர். சபையில் கற்ற கல்வியை எடுத்துரைக்கத் தெரியாதவனுக்கு அவன் கற்ற கல்வி தீய ஒழுக்கம் ஒழுகும் மனைவியைக் காட்டிலும் தீமையானது என்று விளக்குகிறார்.

நெடும்பகல் கற்ற அவையத்து உதவாது

உடைந்துளார் உட்குவரும் கல்வி – கடும்பகல்

ஏதிலான் பால்கண்ட இல்லினும் பொல்லாதே

தீதென்று நீப்பரி தால்" (நீ. நெ. வி. 8)

இக்கருத்தை வள்ளுவர் கற்றவர்கள் கூடும் அவையில் கல்லாதவர் பேசுவது அரங்கு இல்லாமல் ஆட்டம் ஆடுவதைப் போன்றது என்று குறிப்பிடுவர். "அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய / நூலின்றிக் கோட்டி கொளல்" (குறள்,401) என்று கூறுகிறார். கற்க வேண்டியவற்றை முறையாகக் கல்லாதவர்கள் அறிஞர்கள் அமர்ந்திருக்கும் அவையில் பேசுவதால் அறியாமை வெளிப்பட்டுத் தோற்றத்தால் அவர்களுக்குக் கிடைத்த மதிப்பும் கெட்டு நிற்பர். அவர்களின் வாயை ஊத்தைவாய் என்று நீதிநெறி விளக்கம் கூறுகிறது . கல்லாதவர்களுக்குக் கிடைத்த மதிப்பு பறவைகளும் விலங்குகளும் சோளக்காட்டில் வைக்கப்பட்டுள்ள பொம்மைக்கு அச்சம் கொள்வதுபோல் அவர்களுக்கு அச்சம் கொண்டு தரும் மதிப்பாகும் என்கிறார்.

கல்வியின் பெருமை

கல்வி அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கையும் அளிக்கக்கூடியது. . கற்றவர்களுக்குப் புகழைக் கொடுக்கக்கூடியது . துன்பம் நேர்ந்த சமயத்தில் காத்து நிற்கக்கூடியது. அத்தகைய கல்வி மனித உயிருக்கு உற்ற துணையாக இருக்கக்கூடியது என்பதை, "உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை/ சிற்றுயிர்க்கு உற்ற துணை" (நீ. நெ. வி. 2:3-4) என்று குமரகுருபரர் கூறுகிறார். கல்வி கற்கத் தொடங்கும் போது துன்பமாக இருந்தாலும் கற்கக் கற்க இன்பம் அளிக்கும். மூடத்தன்மையை அழித்து அறிவை விரிவுபடுத்தும் என்னும் சிந்தனையைப்

பின்வருமாறு பதிவு செய்கிறார். “ தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயக்கும் / மடங்கொன்று அறிவகற்றும் கல்வி” (நீ. நெ. வி. 3:1-2)

சபையில் பேசுவதற்கு நடுங்குபவருடைய கல்வி அறிவும் கல்லாத மூடர்கள் சபைக்கு அஞ்சாமல் பேசுகின்ற வார்த்தைகளும் தோன்றுவதைவிட தோன்றாமல் இருப்பதே சிறந்ததாகும் என்று ஆசிரியர் கூறுகிறார். கற்ற கல்வி எவ்வளவு பெரியதாக இருந்த போதிலும் அக்கல்வி அறிவைக் கொண்டு அந்தந்த இடத்திற்கு ஏற்ப மெய்ப்பொருளை ஆராய்ந்து உணரக்கூடிய தன்மையும் அப்பொருளைப் பிறருக்கு எடுத்துரைக்கின்ற பேச்சுத் திறனும் இல்லையென்றால் கல்வியில் பயனில்லை. பேச்சுத் திறன் இருக்குமென்றால் பொன்னால் செய்யப்பட்ட பூவானது வாசத்தைக் கொண்டது போன்றதாகும் என்று கூறுகிறார்.

ஒருவன் கற்க வேண்டிய நூல்களைக் குற்றமறக் கற்கவேண்டும் என்பதை “கற்க கசடறக் கற்பவை கற்றபின்/ நிற்க அதற்குத் தக” (குறள்,391) என்று வள்ளுவம் கூறுவது போல கற்கக் கூடியவற்றை நெஞ்சில் நிறுத்திப் பதியும்படிக் கற்க வேண்டும். அவ்வாறு கற்காமல் மேலும் மேலும் புதியனவற்றைக் கற்பது கையில் உள்ள பொருளைக் கீழே சிதறிவிட்டு சல்லடை கொண்டு அரித்து எடுப்பதற்கு ஒப்பாகும் என்று கல்வி கற்கும் முறையைக் கூறியுள்ளார் . ஒருவன் எத்தகைய கல்வியைக் கற்றிருந்தாலும் பொருள் இல்லையெனில் அவன் கற்ற கல்வி தினையளவு கூடச் சிறப்புடையது அல்ல என்பதை எனைத்துணைய வேனும் இலம்பாடார் கல்வி/ தினைத் துணையும் சீர்பா டிலவாம்” (நீ. நெ. வி.10:1-2) எனும் அடிகளில் விளக்குகிறார்.

கற்ற கல்வியைப் பொருளுக்காக விற்கக் கூடாது. அவ்வாறு விற்றால் எமனின் தண்டனைக்கு ஆளாக நேரிடும் . கல்வியைத் தகுதியுடையோருக்குப் பயன்கருதாது கற்பிக்க வேண்டும். பணத்திற்காகத் தகுதியற்றோருக்குக் கற்றுக் கொடுப்பது குற்றமாகும். அழிவில்லாத கல்வியானது அறிவு மிகுந்தவர்களிடத்தே சேரும். விளையாட்டுத்தனம் உடையவர்களிடத்துச் சேர்வதில்லை என்று கல்வியின் சிறப்பைக் கூறியுள்ளார்.

முடிவுரை

சமுதாயம் நிலைத்து நீடித்து வாழ்வதற்குக் கல்வி மிகவும் இன்றியமையாதது. எப்படியும் வாழலாம் என்று இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற குறிக்கோளை ஒரு மனிதனுக்குக் கொண்டு வருவது கல்வியாகும். கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு என்பதற்கேற்ப நூல்கள் பலவற்றைக் கற்க வேண்டும். அறியாமை இருளை அகற்றி வாழ்க்கைக்கு ஒளியேற்றி வைக்கும் கல்வியே உயிருக்கு உற்ற துணையாக வரும். கற்றவர்களுக்குக் கல்வி கற்புடைய மனைவி போன்றது . கற்றவர்களுக்குக் கல்வியே சிறந்த அணிகலனாக அமையும். கல்வியே சிறந்த செல்வமாக இருக்கும். கற்றவர்கள் பணிவுடையவராக இருத்தல் வேண்டும். . கல்லாதவர்களுக்கு அறிஞர்கள் அவையில் மரியாதை கிடைக்காது. கற்ற

கருத்துக்களை அவையில் கூறத் தெரியாதவனின் கல்வி தீய ஒழுக்கம் புரியும் மனைவி போன்று தீமைபயக்கும். கல்வி ஒரு மனிதனின் உயிருக்கு உற்ற துணையாக அமையும். கல்வியைப் பொருளுக்காக விற்கக்கூடாது. கல்வி அறிவுடையவரிடமே சென்று சேரும் என்று கல்வியின் சிறப்புக்களை நீதிநெறி விளக்கத்தில் குமரகுருபரர் விளக்கியுள்ளார்.

பார்வை நூல்கள் :

References

கதிர்முருகு, நீதிநெறி விளக்கம் மூலமும் உரையும் , சென்னை : சாரதா பதிப்பகம், 2007

குன்றக்குடி அடிகளார், எங்கே போகிறோம் , ப்ரீ தமிழ் இ-புக், 2018.

திருக்குறள்,பரிமேலழகர் உரை,சென்னை: சாரதா பதிப்பகம், 2006

நீதி நூல் களஞ்சியம், பத்மதேவன்,தமிழ்ப்பிரியன்,சென்னை:கொற்றவை வெளியீடு,2014.

புறநானூறு, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்,2006.